# திராவிட மாடல் அரசு 27

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

## கலைநகரில் ‘கலைஞர்’!




“புத்தகங்கள் மீதும், புத்தகங்களை வாசிப்பதின் மீதும் வாழ்நாள் முழுவதும் தீராப் பற்றினைக் கொண்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2010-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 102-வது பிறந்தநாள் அன்று சென்னை, கோட்டூர்புரத்தில், ஆசியாவின் அதிநவீன, லட்சகணக்கான நூல்கள் நிறைந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக இந்த நூலகம் விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளில் வாழும் மக்களும், இத்தகைய அரிய வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில், **‘முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம்’** இரண்டு லட்சம் சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்" என்று 2021-ஆம் ஆண்டு ஜூன் 3-அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறிவித்திருந்தார் முதலமைச்சர் அவர்கள். தொடர்ந்து, 2022-ஆம் ஆண்டு ஜனவரி 11 அன்று முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டு, 17 மாதங்களில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, 2023 -ஆம் ஆண்டு ஜூலை 15 - அன்று முதலமைச்சரால் மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நூலகத்தின் கட்டுமானப் பணிகள் 120 கோடியே 75 லட்ச ரூபாய் செலவிலும், 60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நூல்கள், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தகவல் தொழில் நுட்ப உபகரணங்கள், 37 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அறைகலன்கள், திறந்தவெளி அரங்கம் மற்றும் கூடுதல் வசதிகள் என மொத்தம் 218 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் இந்நூலகம் அமைக்கப் பட்டுள்ளது.

### உலகத் தரம் வாய்ந்த நூலகம்!



அடித்தளம் நீங்கலாக 6 தளங்களுடன் அமையப் பெற்றுள்ளது கலைஞர் நூற்றாண்டு நூலகம். நூலகத்தின் அடித் தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், நாளிதழ் சேமிப்பு அறை, நூல் தொகுக்கும் பிரிவு ஆகியவை உள்ளன. தரைத் தளத்தில் கலைக்கூடம், மாற்றுத் திறனாளிகள் பிரிவு, மாநாட்டுக் கூடம், சொந்த நூல்கள் வாசிப்புப் பிரிவு, பல்வகைப் பயன்பாட்டு அரங்கம், உறுப்பினர் சேர்க்கைப் பிரிவு, அஞ்சல் பிரிவு போன்றவை உள்ளன.

முதல் தளத்தில் கலைஞர் பிரிவு, இதழ்கள் பிரிவு, குழந்தைகள் திரை அரங்கம், சிறார் நூலகம் பிரிவு, சிறார் அறிவியல் பூங்கா, அறிவியல் உபகரணங்கள் பிரிவு ஆகியவை உள்ளன. இரண்டாம் தளத்தில், தமிழ் நூல்கள் பிரிவும், மூன்றாம் தளத்தில், ஆங்கில நூல்கள் பிரிவும், ஆராய்ச்சிப் பதிப்புகள் பிரிவும் உள்ளன.

நான்காம் தளத்தில் போட்டித் தேர்வுப் பிரிவு, ஐந்தாம் தளத்தில் அரிய நூல்கள், மின் நூலகம், பல் ஊடகப் பிரிவு, நூல்கள் பாதுகாக்கும் பிரிவு, ஒளி-ஒலி தொகுப்புகள் காட்சிப் பிரிவு, நுண்படச் சுருள் பிரிவும், ஆறாம் தளத்தில் நூல் பகுப்பாய்வு மற்றும் நூற்பட்டித் தயாரித்தல் பிரிவு ஆகியவையும் உள்ளன.

மேலும், தானியங்கி நகரும் மின் படிக்கட்டு வசதி, மின்தூக்கிகள் வசதி, ஒருங்கிணைந்த குளிரூட்டும் வசதி, வாசகர்களுக்கான வைஃபை இணைய வசதி ஆகியவற்றுடன் வாசிப்பதற்கு இதமான சூழலை இந்நூலகம் ஏற்படுத்தித் தருகிறது.

### கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் உள்ள நூல்களின் விவரம்...

❖ **தரைத் தளம் :** தமிழ்நாடு பாடநூல்கள், போட்டித் தேர்வுக்கான நூல்கள், பார்வையற்றோர் படிப்பதற்கான 1,800 பிரெய்லி நூல்கள்.

❖ **முதல் தளம் :** இந்திய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட குழந்தைகள் நூல்கள் 30 ஆயிரம்.

❖ **இரண்டாம் தளம் :** தமிழ் இலக்கியம், இதழியல், கணினி அறிவியல், உளவியல், மெய்யியல், மானுடவியல், சட்டம், பொருளாதாரம், மொழிபெயர்ப்பு, அறிவியல், தொழில் நுட்பம், வரலாறு, புவியியல் உள்ளிட்ட துறை சார்ந்த ஒரு லட்சம் நூல்கள்.

❖ **மூன்றாம் தளம் :** தத்துவம், சமயம், சமூக அறிவியல், வானியல், நுண்கலை, விளையாட்டு, சினிமா, வேளாண்மை உள்ளிட்ட துறை சார்ந்த ஒரு லட்சம் ஆங்கில நூல்கள்.

❖ **நான்காம் தளம் :** டி.என்.பி.எஸ்.சி., டி.ஆர்.பி., யு.பி.எஸ்.சி., வங்கி உள்ளிட்ட போட்டித் தேர்வு தொடர்பான 30 ஆயிரம் நூல்கள் மற்றும் 50 ஆயிரம் ஆங்கிலக் குறிப்புதவி (ரெஃபரன்ஸ்) நூல்கள்.

❖ **ஆறாம் தளம் :** பல்துறை சார்ந்த 60 ஆயிரம் ஆங்கிலக் குறிப்புதவி நூல்கள், தமிழ் மொழி, தமிழ் கலாசாரம், தமிழ் வரலாறு தொடர்பாக 16 ஆயிரம் அரிய நூல்கள், ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள்.

### கலங்கரை விளக்கம்

இந்நூலகத் திறப்பு விழாவின் போது உரையாற்றிய நம் முதலமைச்சர், "தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை என்றால், மதுரை தமிழ்நாட்டுடைய கலைநகரம். தலைநகரில் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தை ஏற்படுத்தித் தந்தார் அவரின் தம்பி கலைஞர். இன்று அந்தத் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டில், இந்தக் கலைநகரில் **கலைஞர் நூற்றாண்டு நூலகம்** எனும் தென் தமிழ்நாட்டின் அறிவாலயத்தை இந்த அடியேன் அமைத்துள்ளேன்" என்றார்.

இந்நூலகத்தின் தேவையைப் பற்றி ஒடிசா மாநில அரசின் முன்னாள் தலைமைச் செயலர் மற்றும் தொல்லியல் ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன், தன் ஃபேஸ்புக் பதிவில், "மதுரையில் கலைஞர் நினைவு நூலகத்தில் ஒரே தளத்தில் போட்டித் தேர்வர்களுக்குப் பயன்படக்கூடிய முப்பதாயிரம் நூல்கள். அடேங்கப்பா. அப்படியென்றால் நூல்கள் வாங்க சென்னைக்குப் போக வேண்டாமா? மாத இதழ்களுக்காகக் கடை அருகே காத்திருக்க வேண்டாமா?

ஆசையாக இருக்கிறது! இந்த நான்காவது தளத்தில் அமர்ந்து படித்து இன்னும் ஒரு முறை குடிமைப்பணித் தேர்வு எழுதி மீண்டும் ஒரு முறை முதல் முயற்சியில் வென்று காட்ட!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரைப் போன்ற பல தலைமைகளைத் தமிழ்நாட்டின் தென் பகுதிகளிலிருந்து இந்த நூலகம் உருவாக்கித் தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை..!

**...சாதனை தொடரும்**

### திருப்பிச் செலுத்தும் அன்பு!



கலைவடிவங்கள் மூலம் கற்பித்தல் நிகழும்போது கற்றல் எளிதாக நிகழ்கிறது. நமது ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பின்னர், பள்ளிகளில் இதற்கு அதிகக் கவனம் அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த எண்ணத்துடன் பல தன்னார்வலர்களும் பல இடங்களில் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர். அவர்களில் மதுரையைச் சேர்ந்த தன்னார்வ ஆசிரியர் செல்வம், **‘நிகழ்த்துக் கலை’** மூலம் அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தும் பணிகளைக் கடந்த எட்டு ஆண்டுகளாகச் செய்து வருகிறார்.

தினம் ஒரு அரசுப் பள்ளி என்கிற வகையில், அவரது பயணம் அமைகிறது. அன்றாட வாழ்க்கையில் குழந்தைகள் சந்திக்கும் விஷயங்களையே நாடகக் கருப்பொருளாக்குவதன் மூலம் நடைமுறைச் சிக்கலை எதிர்கொள்வது, ஆளுமைப் பயிற்சி, கற்பனை வளம், கவனக் குவிப்பு ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துகிறார். கலை வடிவங்களை மாணவர்களுடன் பயன்படுத்துவது குறித்து ஆசிரியர்களுக்கும் சொல்லிக் கொடுத்து வருகிறார் செல்வம்.

வெளிநாட்டு நிதி உதவி பெறும் ஏழைக் குழந்தைகளுக்கான பள்ளியில் படித்து வந்த அவர், தற்போது முழுநேரமாகவே அரசுப் பள்ளி மாணவர்கள் மத்தியில், தனது செயல்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளார். சமூகத்துக்குத் திருப்பிச் செலுத்தும் அன்பு இப்படி அமைந்தால், சமூகநீதிக் களம் மேன்மை அடையும்.

### ஃப்ளாஷ்பேக்



### பெரும் பாக்கியம்!



கஜேந்திரன்

1995-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி, அண்ணா அறிவாலயத்தில் இளைஞர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி சார்பில், முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில், வடசென்னை மாவட்ட இளைஞர் அணியைப் பாராட்டி தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சிறப்பாகப் பணியாற்றிய இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பொன்னாடை போர்த்தி அழகு பார்த்தார். அந்த நிகழ்வு, தொண்டனாக எனக்கு, தலைவரிடம் கிடைத்த பெரும் பாக்கியம்.

**-நா.கஜேந்திரன், முன்னாள் துணை அமைப்பாளர், இளைஞர் அணி, இராயபுரம், வட சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### ஆட்சி மாற்றம்!

**1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல். அப்போது ஆட்சிமாற்றம் நிகழவில்லையெனில், எதிர்க்கட்சியினர் எந்தக் காலத்துக்கும் தலையெடுக்க முடியாது என்கிற நிலை. ‘அடக்குமுறைகள்’, ‘அரிசிப் பஞ்சம்’ என தமிழ்நாடு பெரும் துயரத்திலிருந்த நேரம். தமிழ்நாட்டின் நம்பிக்கையாக கழகம் மட்டுமே இருந்தது. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றி, தேர்தல் வெற்றியைச் சந்திக்கக் கழகத்தின் முன்னோடிகள் தீவிர களப்பணியாற்றினர். ஒருவாரம் கழித்தே வாக்குகள் எண்ணப்பட்டன. முதற்கட்ட அறிவிப்புகளே கழக வெற்றிக்கு முரசு கொட்டின.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 188




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131